# துமிந்த சில்வாவுக்கு வழங்கிய பொதுமன்னிப்பு செல்லுபடியற்றதென உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

## தண்டனையை நடைமுறைப்படுத்தவும் உத்தரவு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தை வலுவற்றதாக்கி, உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயிரிழந்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி சுமனா பிரேமச்சந்திர, அவரது மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரான சட்டத்தரணி கஸாலி ஹுசைன் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இதன்படி, பிரதிவாதிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 03 புதன்கிழமை 17.01.2024 கதிர் 159



14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளி மைதானத்தில்

JANUARY 19 | 20 | 21

JITF 2024

14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR


## பாடசாலைகள் ஆரம்பிக்கும் திகதியில் மாற்றம் வந்தது!

அரசாங்கப்பாடசாலைகள் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான இறுதிக் கட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தர விவசாய விஞ்ஞானப் பாடப் பரீட்சையின் 2 ஆம் பகுதி இரத்து செய்யப்பட்டிருந்த நிலையில், முதலாம் பகுதி வினாத்தாளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற உயர்தர விவசாய விஞ்ஞானப் பாடத்தின் 2 ஆம் பகுதியை பரீட்சைகள் திணைக்களம் இரத்துச் செய்வதாக கடந்த 12 ஆம் திகதி அறிவித்திருந்தது.

குறித்த வினாத்தாளின் சில வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பப்பட்டதாக வெளியான தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்திருந்தார்.

## பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு






"பொங்கு தமிழ்" பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இன்று நண்பகல் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா.இளம்பிறையன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு இதே நாளில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் 2▶

### இலங்கைச் சரித்திரத்திலே முதல் முறை

## ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என மன்று தீர்ப்பு!

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு

இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இன்று புதன்கிழமை முல்லைத்தீவு மாங்குளம் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்திருந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, துமிந்த 2▶

## ஒவ்வொரு லீற்றர் பெட்ரோல், டீசலுக்கும் வற் வரி செலுத்த வேண்டிய நிலையுள்ளது

### எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் தெரிவிப்பு

எரிபொருள் விற்பனையின்போது ஒவ்வொரு லீற்றர் பெட்ரோல் மற்றும் டீசலுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் 'வற்' வரி செலுத்த வேண்டியிருப்பதால் எதிர்வரும் காலங்களில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் பாரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கவுள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்களின் சங்கம் 2▶

## யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளை முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலை திட்டம்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாளை முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாளைய தினம் முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்போது மாவட்டத்திலுள்ள அனைத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இந்த வேலைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள்.

கடந்த டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 2,800 க்கு மேற்பட்டவர்கள் யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கின்றார்கள்.

குறிப்பாக திருநெல்வேலி, 2▶

## தாதியர்கள் இன்று 24 மணித்தியால பணிப்புறக்கணிப்புப் போராட்டம்!

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட கொடுப்பனவை தங்களுக்கும் வழங்குமாறு வலியுறுத்தி தாதியர் 24 மணித்தியால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 35,000 ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு வலியுறுத்தி, 72 சுகாதார தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று காலை 6.30 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

எனினும், நேற்றைய தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்காத தாதியர்கள் இன்று காலை 7 மணிமுதல் 24 மணித்தியால பணிப்பறுக்கணிப்பில் ஈடுபடுவதாக அரச தாதியர்கள் சங்கம் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், வைத்தியசாலைக்கு வருகைத் தரும் நோயாளர்கள் இதனால் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அதேநேரம், நிதி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பவற்றுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்றுத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வேலைநிறுத்தத்தில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பநல சுகாதார தாதியர்களும் ஈடுபட்டனர்

## சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட 35,000 ரூபா கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட உதவி மருத்துவ மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் நேற்று (16) மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பநல சுகாதார தாதியர்களும் ஈடுபட்டதாக தேசிய குடும்பநல சுகாதார தாதியர் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

மகப்பேற்று மருத்துவ மனைகள், குழந்தை மருத்துவ மனைகள், பிரசவத்திற்கு முந்தைய அமர்வுகள், சேவை நிமித்தம் வீடுகளுக்குச் செல்லல், எடையறிதல், திரிபோஷா உணவளித்தல் போன்ற மருத்துவமனை மற்றும் களப்பணிகள் குடும்ப சுகாதார அலுவலர்கள் இல்லாததால் தடைபட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்கா விட்டால், எதிர்காலத்தில் இதனையும் விட கடுமையான நடவடிக்கைகளில் இறங்குவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரெத-45)

# மறைந்த நடிகர் விஜயகாந்தின் துணைவியாருக்கு நேரில் சென்று ஆறுதல் கூறிய ரவூப் ஹக்கீம் எம்.பி.



(எம்.ஏ.ஏ.அக்தார்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், மறைந்த நடிகர் விஜயகாந்தின் வீட்டுக்கு சென்று அவரின் மனைவிக்கு ஆறுதல் கூறியுள்ளார்.

தேசிய முற்போக்கு திராவிட கழக நிறுவனர் தலைவர் கப்டன் விஜயகாந்த் சமீபத்தில் உடல் நலக்குறைவால் காலமாகியிருந்தார்.

இலங்கையிலிருந்து சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும் பாரளுமன்ற உறுப் றவூப் ஹக்கீம்சென்னை சாலிகிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு இன்று காலை சென்ற ரவூப் ஹக்கீம், விஜயகாந்த்தின் துணைவியார் பிரேமலதா விஜயகாந்த்தைச் சந்தித்து ஆறுதல் கூறி, விஜயகாந்த் தின் சாதனைகள் மற்றும் பல்வேறு பணிகளை குறித்து நினைவுகூர்ந்து பேசியிருந்தார்.

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் வசமாகச் சிக்கினார்

மன்னார், தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் நேற்று மாலை குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான வகையில் சிலர் தங்கியிருக்கின்றனர் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் பிரதேச பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து அந்த வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது வீட்டில் இருந்து 520 சட்டவிரோத போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைதான நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது இந்தியாவில் இருந்து கடல் வழியாகப் போதை மாத்திரைகள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று வாக்கு மூலம் வழங்கியுள்ளார். மேற்படி நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வாவிற்கு கொடுத்த மன்னிப்பை புறந்தள்ளி அது தவறாக சட்டவிரோதமாக கொடுக்கப்பட்ட மன்னிப்பு செல்லுபடியற்றது என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலை சம்பந்தமாக மரதண்டனைக்கு உட்படுத்தப்பட்ட துமிந்த சில்வாவிற்கே இந்த தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஹிருணிகா பிரேமசந்திர சார்பிலே நான் ஆஜராகி இருந்து இந்த வழக்கை வாதாடி இருக்கின்றேன்.

இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது. இது வரவேற்க வேண்டிய ஒரு விடயம் வேறு சில வழக்குகளும் நிலுவையிலே இருக்கின்றன.

விசேடமாக மிருசுவில் படுகொலையாளி சுனில் ரட்நாயக்கவிற்கு கொடுத்த மன்னிப்பையும் நாங்கள் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம். அந்தத் தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## ஒவ்வொரு லீற்றர் பெட்ரோல், ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

தாம் பெறும் மூன்று சதவீதத்திற்கும் குறைவான கொமிஷனிலிருந்து 'வற்' செலுத்தல், பில்கள் வழங்குதல், செயல்முறை ஏற்பாடுகள், மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றை எவ்வாறு செய்வது எனத் தெரியாமல் தமது எரிபொருள் விநியோக உறுப்பினர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு 'வற்' வரி காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி இராஜாங்க அமைச்சர் டி. வி. சானக்கவுடன் கலந்து பேசுவதற்கு நேரமொன்றை ஒதுக்கித் தருமாறு மேற்படி சங்கம் கோரியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோருக்கு இதற்கான கடிதத்தை சங்கத்தின் சார்பில் அனுப்பியுள்ள போதிலும், இதுவரை எவ்விதமான பதிலும் கிடைக்கப் பெறவில்லை என சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ரெத-44)

## பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவில், யாழ் நகரை அண்டிய பகுதிகளில் அதிகளவானோர் கடந்த இரண்டரை மாதங்களுக்குள் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

ஆகவே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பொதுமக்கள் இது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

சுகாதாரத் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த திணைக்களங்கள் அனுசரணையாக இருக்க முடியும். ஆனால், பொதுமக்கள் தங்களுடைய வீட்டுச் சுற்றுப் பகுதிகளில் டெங்கு நோய் பரவும் அபாயத்தை இல்லாது ஒழிக்க வேண்டும். ஏனெனில் இந்த அபாயம் ஏற்பட்டால் சில சமயங்களில் இழப்பு ஏற்படலாம்.

இப்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தினசரி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

நாளை காலை 8.30 மணி முதல் கொக்குவில் கிழக்கு பகுதியில் 20 குழுக்களாக இந்த டெங்கு ஒழிப்புப் பணியை ஆரம்பிக்க இருக்கின்றோம். இந்த வேலைத் திட்டத்தில் அந்தந்தக் கிராமங்களில் இருக்கின்ற பொதுமக்கள் சார் அமைப்புகள் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் இருவர் இணைப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் 2023 இல் நடைபெற்ற தொழில் பயிற்சி நிலையங்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட மூதூர் மற்றும் கிண்ணியா பகுதிகளிலுள்ள செவிப்புலன் குறைபாடு உடைய இரண்டு மாற்றுத்திறனாளிகள் கண்டியில் அமைந்துள்ள கட்டவெல தொழில் பயிற்சி நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜின் வழிகாட்டுதலுக்கிணங்க திருகோணமலை மாவட்ட செயலக சமூக சேவைகள் பிரிவினால் நேற்று அவர்கள் நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு உட்சேர்க்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன், மாவட்ட செயலக விசேடதேவையுடையோருக்கான தேசிய செயலகத்தின் இணைப்பாளர் துவாரகன் மற்றும் பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த முகாமைத்துவ சபை கல்முனையில் அமைப்பு!

(நூருல் ஹுதா உமர்)

அனர்த்தங்கள் மற்றும் அசாதாரண நிலைமைகள் போது பொது மக்களுக்கு உதவும் நோக்கில் கல்முனை முஹ்யித்தீன் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் உலமாக்கள், அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் பொது அமைப்புகளின் பங்குபற்றுதலுடன் அனர்த்த முகாமைத்துவ சபை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சபைக்கு தலைவராக கல்முனை முஹைதீன் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் என்.எம். நௌஸாத்தும், பொருளாளராக இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.பி.எம். இர்ஷாத்தும், கல்முனை அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் உலமா சபை தலைவர் மௌலவி பி.எம்.ஏ.ஜெலீல் பாகவி மற்றும் கல்முனை ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் மௌலவி அஷ்செய்க் முர்ஷித் முப்தி ஆகியோர் உதவித் தலைவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உப செயலாளராக ஓய்வு நிலை மலேரியா தடுப்பு அதிகாரி எம்.ஐ.எம். சலாஹுத்தீனும், கணக்குப் பரிசோதகராக இலங்கை வங்கி முகாமையாளர் ஏ.எம்.எம். முஸ்த்தக்கீன் மௌலானாவும் நிருவாக சபையின் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்தக் கூட்டத்தின் போது, அனர்த்த முகாமைத்துவ சபைக்கு தனியான நிதியத்தை உருவாக்கி அதனை தொடர்ந்து செயற்படுத்துதல், முதல் கட்டமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களின் தரவுகளை பிரதேச செயலகத்தினூடாகப் பெற்று அதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு உலர் உணவு வழங்குதல் போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# டெங்கு நுளம்பு பரவுமாறு சூழலிருந்தால் உடனே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடைமழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் பள்ளமான இடங்களில் தற்போதும் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது. இது டெங்கு குடம்பிகள் உற்பத்தியாவதற்கான தகுந்த சூழலாகும்.

எனவே, டெங்கு குடம்பிகள் உருவாக ஏதுவான காரணிகளை பொது மக்கள் அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்கான எரித்தல், புதைத்தல் மற்றும் தெளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் இதனை மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஸத் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள்,தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், மத ஸ்தாபனங்கள், வீடுகள், வெற்று வளவுகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் என்பவற்றுக்கு பொது சுகாதார பரிசோதகர்களும்,சாய்ந்தமருது பொலிஸாரும் தற்போது பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் .

அத்துடன், கல்முனை மாநகர சபை திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள் டெங்கு நுளம்புகளை சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து முற்றாக இல்லாதொழிப்பதற்கு உதவி புரியுமாறு டொக்டர் அர்ஸத் காரியப்பர் கேட்டுள்ளார்.



# மிதி வெடி

*ஹலோ... தம்பி கோபாலு... ஐயா ஏதும் பொங்கல் சேதி தந்தவரோ..?*

*பொங்கல் வாழ்த்துப் போட வேணுமெல்லோ.. வழக்கம் போல என்னுடைய உதவியாளைக் கேட்டன்...*

*என்னத்தைப் பெரிசாச் சொல்லப் போறார். அடுத்த பொங்கலுக்குள்ள தீர்வு தராட்டி, அடி இருக்கெண்டு போடுவமண்ணை. அதைத் தானே அவர் சொல்லுவார்? என்று என்ர பொடியன் சொல்லி முடிக்கவும், அவன் சொன்னது போலவே ஐயான்ர செய்தி வரவும் சரியாயிருந்தது.*

*ஐயா என்ன சொன்னவர், எப்பிடிச் சொன்னவர் எண்டதை நீங்கள் பேப்பரில பார்த்திருப்பியள் தானே?*

*பொங்கல் - வருசம், தீபாவளி எண்டா அடுத்துக்குள்ள அது வேணும், இது வேணும் எண்டு ஐயா அறிக்கை விடுறதும், போராட்டம் வெடிக்கும் எண்டு அண்ணன் அறைகூவல் விடுறதும் வழமை தானே? அதை விடுங்கோ்*

*தமிழ்நாட்டு அரசியல விட நம்ம நாட்டு அரசியல் கேவலமாப் போச்சுது. இப்ப். தமிழரசு படுற பாட்டைப் பாத்தா காறித் துப்பத்தான் மனம் வருகுது பாருங்கோ்.*

*அந்தக் காலத்தில நாங்கள் முறுக்கேறித் திரிஞ்ச நேரத்தில, எங்களுக்கு தலைவர் எண்டா ஒருத்தர் தான். அவர் காட்டுறது தான் பாதை, சொல்லுறது தான் வேதம். இப்ப மாதிரி ஆளுக்கொரு தலைவருமில்லை, அங்கயிங்க எண்டு கட்சியளுமில்லை.*

*இப்ப என்னடா எண்டா, கட்சி ஒண்டாக இருந்தாலும் தலைவர் மார் கனபேர். நிண்டவன், போனவன், வந்தவனுக்கெல்லாம் சிமார்ட் போஃன் வாங்கிக் குடுத்து வட்ஸ்அப் லயும், பேஸ்புக் லயும் கட்சி நடத்தினம் பாருங்கோ்*

*என்னைக் கேட்டியள் எண்டா, உதுக்கெல்லாமே காரணம் உவர் மாவையர் எண்டு தான் சொல்லுவன். தலைமையைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு தன்ர பதவியைக் காப்பாத்த வேணுமெண்டு காலம் கடத்தினவரே தவிர, கட்சியைப் பற்றி அவருக்கு எந்தக் கவலையுமல்லை. இல்லாட்டி உந்த மனுசனும் இண்டைக்கு ஒரு எம்.பி ஆக இருந்திருக்கும்.*

*சுமந்திரனுக்கு அடிக்கிறன் எண்டு சொல்லி, கண்டவனெல்லாம் உசுப்பேத்தி விட, கூடாத கூட்டங்களோட சேராத சேர்க்கை சேர்ந்து கடைசியில கட்சித் தலைமையைக் கூட காப்பாத்தேலாமல் நிக்கிறார். வயசு போன நேரத்தில பேரப் பிள்ளையைக் கொஞ்சிக் கொண்டிருக்கலாமெண்டா அதுக்கும் வழி இல்லாமல் அங்க ஒண்டும் இங்க ஒண்டுமா நிக்குதுகள்.*

*சும்மா சொல்லப்படாது, வைச்சுச் செய்யுறதெண்டா அதுக்குரிய மந்திரம் தெரிஞ்ச ஆள் ஒராள் தான். 2020 தேர்தல் நேரத்தில கண், கடை தெரியாமல் வெளுத்ததெல்லாம் பால் எண்டு நினைச்சுக் கொண்டு, இராப்பகலா வீட்டில வந்து நிண்டு வேதமோதின சாத்தான்களோட சேர்ந்து நிண்டு சாத்தின சாத்துக் கெல்லாம் மாவையர் இப்பத்தான் படிக்கத் தொடங்கிறார்.*

*இரட்டைக் குழல் துப்பாக்கி கணக்கா “சு” வும், “சி” யுமாச் சுழட்டிச் சுழட்டிச் சாத்துகினம். அண்ணருக்கு இப்பக் கூட என்ன செய்ய வேணுமெண்டது தெரயேல்லப் பாருங்கோ.. உசுப்பேத்தி விட்டதுகள் எல்லாம் “செத்த மாட்டில உண்ணி கழண்டது போல.. “நடுத் தெருவில விட்டுட்டுதுகள்.*

*கொரோனா எண்டும், அதெண்டும், இதெண்டும் கட்சித் தலைமைப் பதவியை விட்டுக் குடுக்காமல் இருந்தவர், வெளித் தலையீடுகள் தாங்கேலாமல் 21 ஆம் திகதி கட்சித் தேர்தல வைக்கிறதுக்கு ஓமெண்டிருக்கிறார். ஒப்புக்குச் சப்புக்கு ஓமெண்டு சொன்னாலும், விட்டுட்டுப் போறதுக்கு மனமில்லைப் பாருங்கோ... எப்பிடி மனம் வரும்? கொஞ்சமோ. நஞ்சமோ.. இனி என்ன செய்யுறது?*

*தேர்தல் அறிவிச்ச பிறகும், அதை எப்படி நடத்தாமல் விடலாம் எண்டுறதுக்காகவே கூட்டுச் சேர்ந்து யோசிச்சு கன பிளான் போட்டவை பாருங்கோ...*

*சுத்துமாத்து.. சுத்துமாத்து எண்டு மற்றவனைக் குற்றஞ்சொன்ன எல்லாருமாச் சேர்ந்து சுத்தி மாத்த வெளிக்கிட்டவை ஒண்டும் முடியாமல் போச்சுது.*

*தொகுதிக் கிளையள வைச்சு கூட்டம் வேணாம் எண்டு கூப்பாடு போட்டிச்சினம். பெருந் தலைவரைக் கொண்டு கடுங்கடிதம் எழுதிப் பாத்திச்சினம் ஒண்டும் சரிப்பட்டு வரேல்ல..*

*கடைசியா, “சூ”னாவையும், “சீ”னாவையும் மோத விட்டுப் பாப்பமெண்டு முகப்புத்தகத்-துக்குள்ளால நோண்டி விட்டுப் பாத்திச்சினம். உருப்படியா ஒண்டும் ஆகேல்ல..*

*அவையள் ரெண்டு பேரும் ஆளாளுக்கு அடிதடிப்படுற மாதிரி வெளியில காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள்ள வலு ஒட்டுப் பாருங்கோ.. ஆர் வந்தாலும் அண்ணனைக் கலைக்கிறது தான் அவையின்ர இலக்குப் பாருங்கோ.. அல்லக்கையள் அடிபடுகிறதப் பற்றி அவையளுக்கு அக்கறையில்ல.. எல்லாம் செப்படி வித்தை பாருங்கோ.!*

*இதெல்லாம் நல்லாத் தெரிஞ்சாலும், அண்ணருக்கு இருக்கிற அடிவருடிகளின் திட்டப்படி, கடைசி நேரத்தில “ஞானம்” வேலை செய்யுமெண்டு இன்னும் நம்பிக்கொண்டு தான் இருக்கினம்.*

*வடக்கு - கிழக்கு எண்டு பிரிவினை காட்டிப் பிரிச்சுப் போடப் பார்த்தவை, இப்ப திருகோணமலை - மட்டக்களப்பு எண்டு துண்டாடத் துடிக்கினமாம்...*

*இதுக்குள்ள இன்னுமொரு வியூகம் வேற...*

*தமிழரசோட சரிப்பட்டு வராது எண்டு முரண்டு பிடிச்சுக் கொண்டு கூட்டமைப்பைக் கொண்டு போறம் எண்டு வெளிக்கிட்டுப் போனவைக் கெல்லாம் இப்ப தமிழரசில திடீரெண்டு பாசம் பொங்கி வழியுது... அவர் வரவேணுமெண்டு ஒரு பகுதியும், இவர் வர வேணுமெண்டு ஒரு பகுதியுமா உருகத் தொடங்கியிருக்கினம் பாருங்கோ..*

*வேணாமெண்டு விட்டுட்டுப் போனவைக்கு இவ்வளவுக்கு அக்கறை வருகுதெண்டா.. “அஜெண்டா” என்னவெண்டு சின்னப்பிள்ளைக்கும் விளங்கும் தானே? பெரியண்ணை வீட்டுப் பினாமிகளுக்கு பேரப்பிள்ளையள் மீது அவ்வளவு ஆர்வம் பாருங்கோ.!*

*அதைவிடுங்கோ.. நாங்க உள் “வீட்டு” ப்பிரச்சினையப் பாப்பம்.. கிழக்கில இருந்து தலைவர் வர வேணுமெண்டு சொன்னதே அதுக்காகத் தான். மலையில இருக்கிற தாசன் மந்திரத்துக்காகத் தாளம் போடுவார் எண்டதால, சீனித்தம்பி மகனைச் சீவி விட்டிருக்கினம்.*

*வாக்குப் போடப்போற முந்நூற்றி நாப்பதில முக்கால் வாசி வடக்கு - கிழக்கெண்டு பாக்காமல் அண்ணருக்காக வாக்கை அள்ளிப் போடுற திட்டமொண்டும் இருக்குதாம..*

*பாரதப் போரில பாவிச்சது போல ஒரேயொருக்கா “நாக” அஸ்திரத்தைப் பாவிக்கப் போகினமாம். திட்டப்படி “யோகம்” அடிச்சால், அவர் பதவியை விட்டு இறங்கிப் போக, இவர் வரலாம் எண்டதொரு நப்பாசை தான்...*

*ஆசை யாரைத்தான் விட்டது?*

*-நரமுனி-*

# நைஜீரியாவில் நிகழ்ந்த படகு விபத்தில 8 பேர் மரணம்! 100க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை எனவும் தகவல்



வட மத்திய நைஜீரியாவில் நிகழ்ந்த படகு விபத்தில் குறைந்தது 8 பேர் பலியாகியுள்ளதாகவும் 100 பேர் காணாமல் போனதாகவும் அந்த நாட்டு அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படகில் அதிக எடை ஏற்றப்பட்ட காரணத்தால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

போர்கு என்ற மாவட்டத்தில் இருந்து அருகில் உள்ள கெப்பி என்ற பகுதிக்குச் சென்ற படகு ஆற்றின் நடுவே மூழ்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த மாநில அவசர உதவி மேலாண்மை முகமையின் செய்தித் தொடர்பாளர் அடு, "படகில் அதிக எடை இருந்ததால், காற்று பலமாக தாக்கியது- படகைப் பாதித்துள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த படகின் கொள்ளளவுக்கு அதிகபட்சமாக 100 பயணிகளை மட்டுமே ஏற்ற இயலும் என்றும், அதனை விட அதிகமான பயணிகள் படகில் இருந்ததாகவும் அவர்களை விட தானிய மூட்டைகள் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முறையான நெறிமுறைகள் இல்லாததாலும், சாலைப் போக்குவரத்து சீராக இல்லாததாலும் அதிக மக்கள் படகுகளில் செல்ல வேண்டிய சூழலால் இவ்வாறு படகு விபத்துகள் அடிக்கடி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7 மாதங்களில் 100 பயணிகளுக்கும் அதிகமாக ஏற்றிச் சென்ற ஐந்துக்கும் மேற்பட்ட படகுகள் மூழ்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன. (04)

# பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் தீவிரவாதிகளைக் குறிவைத்ததாகத் தகவல்



பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. ஜெய்ஷ் அல்-அட்ல் என்ற தீவிரவாத அமைப்பை குறிவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும், மூன்று பேர் காயமடைந்துள்ளதாகவும் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில் பாகிஸ்தான் மீது ஈரான் இவ்வாறு ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது பதற்றத்தைக் கூட்டியுள்ளது. அண்மையில் ஈராக், சிரியா மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டிருந்தது. இந்தச் சூழலில் பாகிஸ்தானை இப்போது தாக்கியுள்ளது. முன்னதாக, இம்மாத தொடக்கத்தில் ஈரானில் நடந்த காசிம் சுலைமானி நினைவேந்தல் நிகழ்வில் நடந்த குண்டு வெடிப்பில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் நடந்த தாக்குதல்களில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதாக ஈரான் நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தின் மலைப்பகுதியில் ஈரான் - பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பாகிஸ்தான் பகுதியில் சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பகுதியில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

கடந்த 2012 இல் உருவாகிய ஜெய்ஷ் அல்-அட்ல் தீவிரவாத அமைப்பு எல்லைப் பகுதியில் பணியாற்றும் ஈரான் பொலிஸாரை கடந்த காலங்களில் கடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தான் நாட்டின் வான்வெளியில் ஈரான் அத்துமீறி நுழைந்து நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மூன்று சிறுமிகள் காயமடைந்துள்ளனர். இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. தீவிரவாதம் பொதுவான அச்சுறுத்தல் என பாகிஸ்தான் சொல்லி வருகிறது. அதை தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. இந்த மாதிரியான தாக்குதல்கள் அண்டை நாடுகளில் நம்பிக்கையை பாழாக்கும், என தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# தென்கொரியாவுடனான ஒருங்கிணைப்பு இனி இல்லை! வடகொரிய அதிபர் கிம் ஜோங்-உன் அதிரடி அறிவிப்பு

தங்கள் நாட்டையும் தென் கொரியாவையும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் இனிமேல் தொடரப்படாது என்று வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன் அதிரடியாக அறிவித்துள்ளார்.

ஒருங்கிணைப்புக்கு வழிவக்கும் தங்கள் நாட்டு அரசியல் சாசனத்தின் சட்டப்பிரிவை நீக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார். இது தவிர, தென் கொரியாவுடன் நல்லுறவைப் பேணுவதற்காகச் செயல்பட்டு வந்த அரசுத் துறைகளும் கலைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க-தென் கொரிய கூட்டு ராணுவப் பயிற்சிக்கு எதிராக வட கொரியா ஏவுகணை, எறிகணைச் சோதனைகளை நடத்துவது, அதற்குப் பதிலடியாக தென் கொரியாவும் ஆயுத சோதனைகளை மேற்கொள்வது என்று இரு தரப்பிலும் பதற்றம் அதிகரித்து வரும் சூழலில் இந்த அறிவிப்பு வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிவிப்பால், ஒரே மாதிரியான இன, மொழி, தேசிய அடையாளங்களைக் கொண்ட வட கொரியாவையும், தென் கொரியாவையும் ஒருங்கிணைப்பதற்காக பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (04)




# அமெரிக்காவின் பல பிரதேசங்களில் கடும் குளிரால் இயல்பு நிலை பாதிப்பு



அமெரிக்காவின் பல பகுதிகளில் அபாயகரமான குளிர் நிலவி வருகிறது. குளிர் அலைகள் வீசுவதால் சய 30 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை குறைந்துள்ளது.

85 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்கு செவ்வாய்கிழமை மின்சாரம் தடைப்பட்டுள்ளது. ஓரேகான் பகுதி சனிக்கிழமை முதலே மின் தடையை எதிர்கொண்டுவருகிறது. போர்ட்லாண்ட் அதிகாரிகள் உறைபனி நிலவுவதால் சீரமைப்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சாலை வழியாக பயணிப்பதைத் தவிர்க்குமாறு மக்களுக்கு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பனிப்பொழிவால் உறைபனி உருவாகியுள்ளதாகவும் அதன் கனத்தால் மரங்கள் மற்றும் மின்சார இணைப்புகள் சேதமடைந்து விழுவதற்கான அபாயம் குறித்தும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

விமான சேவை, விளையாட்டுப் போட்டிகள், அதிபர் தேர்தலுக்கான பரப்புரை எல்லாமும் குளிரால் பாதிப்படைந்துள்ளன.

போர்ட்லாண்ட் பகுதியில் உடல்வெப்ப உயர்வால் ஏற்படும் ஹைப்போதெர்மியா நோயினால் இருவரும் மரம் வீட்டின் மேல் விழுந்ததால் ஒருவரும் பலியாகியுள்ளனர். மில்வாக்கி பகுதியில் வீடற்ற மூவர் பலியாகியுள்ளமை குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

சிகாகோ, போர்ட்லாண்ட் உள்ளிட்ட பகுதிகளில் பாடசாலைகள், கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை விடப்பட்டது.

2,900 க்கும் அதிகமான விமானப் பயணச்சீட்டுகள் ரத்துச் செய்யப்பட்டதாக திங்கட்கிழமை தனியார் அமைப்பு ஒன்று தகவல் தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தின் மத்தியில் வெப்பநிலை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய குளிர் அலை ஒன்று வடக்கு மற்றும் மத்தியமேற்கு பகுதி வழியாக வாரக் கடைசியில் தெற்கு நோக்கிச் செல்லும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. (04)

# தொடரும் நெருக்கீடுகளிடையே தப்பிப்பிழைத்தலும் எதிர்ப்பும்! யாழ் பல்கலை கலைப்பீட இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நாளைய தினம் வியாழக்கிழமை (18) நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழா ஆண்டின் தொடக்க நிகழ்வுகளில் ஒன்றாகவும், பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஓர் அம்சமாகவும் இந்த இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இந்த மாநாட்டில் கலைப்பீடத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதாயக் கற்கைகள் சார்ந்த 136 ஆய்வுக்கட்டுரைகள் பட்டப்படிப்பை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

"இலங்கையில் தொடரும் நெருக்கீடுகளிடையே தப்பிப்பிழைத்தலும் எதிர்ப்பும்" என்னும் கருப்பொருளில் நடைபெறும் இந்த ஆய்வு மாநாடு, மாணவர்கள் தமது இறுதிவருட ஆய்வுச் செயற்பாட்டின் பேறான ஆய்வேடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த ஆய்வுக்கட்டுரைகளை வெளிக்கொண்டுவரும் முயற்சியாக அமைந்துள்ளது.

வியாழக்கிழமை (18) காலை 9 மணியளவில் மாநாட்டின் அழைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.எல். ரமணன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

மாநாட்டின் தலைமையாளராக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், மற்றும் சிறப்புரையாளராக இரேனியஸ் செல்வின், ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரி ஆகியோர் கலந்துகொள்வர்.

ஆய்வுக்கட்டுரை அமர்வுகள் இரண்டு தொகுதிகளாக 17 விடயதானங்களின் ஊடாக காலை 11 மணிக்கும் மதியம் 1 மணிக்கும் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரை மண்டபங்களில் ஆரம்பமாகும். (01)

# 1500 பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாச புத்தகங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

பொது சமூக சேவைகள் அமைப்பினால் வருடாந்தோறும் இடம்பெறும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டத்தின் இவ் வருடத்திற்கான 1500 மாணவர்களுக்கு அபியாச புத்தகங்கள் நிகழ்வு கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக 500 மாணவர்களுக்கான புத்தகங்கள் கடந்த வாரம் பிரதேச வாரியாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கான பிரதம அனுசரனையாளராக இளைஞர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் அவர்கள் காணப்படுவதோடு, இந்நிகழ்வின் பிரதம அதிதியாகவும் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் இந்நிகழ்வில் பொது சமூக சேவைகள் அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஏனைய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச வாரியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் கழகங்களின், அமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# கலைஞர் சுவதம் விருது!



அம்பாறை மாவட்ட இலக்கிய விழாவில் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல பணிப்பாளர் ஓய்வு நிலை கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் கண்.இராஜரெத்தினம் (கண்ணன்) அவர்களுக்கு கலைஞர் சுவதம் விருதினை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம வழங்கி வைத்தார்.

(படம் - வி.ரி.சகாதேவராஜா)

# குறிஞ்சாக்கேணி பாலத்தில் போக்குவரத்து ஆரம்பம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த 7 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட குறிஞ்சாக்கேணி இரும்புப் பாலத்தின் நிர்மாண வேலைகள் முடிவடைந்து நேற்று செவ்வாய்க்கிழமை அப்பாலத்தினூடாக போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாலத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியானது சம்பந்தமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பார்வையிட்டனர்.

# சிறுவர், கர்ப்பிணிப் பெண்களுக்கான சிகிச்சை நிலையம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் திறந்து வைப்பு



யாழ்ப்பாணம் - அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சை நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை (16) திறந்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக கர்ப்பிணிப் பெண்களுக்கான மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சையை வழங்குவதில் சிரமத்தை எதிர்கொண்டு வந்த அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு பத்தமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவானந்தனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் முழுமையான நிதியுதவியில் 17 லட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த கட்டிடம் அமைக்கப்பட்டது.

வைத்தியசாலை நலன்புரிச் சங்கச் செயலாளர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் குறித்த கட்டிடத் தொகுதியினை ஆறுமுகம் சிவானந்தன் குடும்பத்தினர் மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்தக் கட்டடத் தொகுதியானது சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிகிச்சைகளை வழங்குவதுடன் அவர்களைப் பராமரிப்பதற்கு ஏதுவாக இதர வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



# தென்கிழக்கு பல்கலைக்கழகம் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் பாரிய சொத்து இழப்புத் தவிர்ப்பு – உபவேந்தர் ரமீஸ் தெரிவிப்பு



(அஸ்லம் மௌலானா)

வெள்ள அனர்த்தத்தினால் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் காரணமாக நாம் மேற்கொண்ட முற்பாதுகாப்பு நடவடிக்கைகளினால் பாரிய சொத்து இழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருப்பதாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் காரணமாக தென்கிழக்கு பல்கலைக் கழக கல்வி நடவடிக்கைகள் கடந்த 11 ஆம் திகதி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக் கப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை சீர் செய்து, பல்கலைக் கழகத்தை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்காக உபவேந்தரின் நேரடி கண்காணிப் பில் ஊழியர்களினால் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாகத் தகவல் வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது பல்கலைக்கழகத்துக்குள் இருந்த வெள்ளம் வடிந்து வருகின்ற நிலையில் தாழ்வான சில இடங்களில் தற்போதும் நீர் தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது. மேலும் கட்டடத் தொகுதிகளுக்குள் உட்புகுந்த வெள்ள நீரினால் தளபாடங்கள், உபகரணங்கள் பல பாதிக்கப்பட் டுள்ளன.

ஏற்கனவே அனர்த்த முகாமைத்துவ பிரிவினரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பயனாக ஊழியர்க ளின் மேலான ஒத்துழைப்புடன் சொத்து இழப்புக்களை குறைக்க கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும் வெள்ள நீரை அகற்றி, கட்டடங்களை யும் சூழலையும் சுத்தப்படுத்தும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின் றன. அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங் கள் ஏற்பட்டால் கையாள வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்- என்றும் அவர் குறிப்பிட்டார்.

# குப்பைமேட்டுக்கு வரும் யானை அருகில் குடியிருப்போர் அச்சம்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பாரதிபுரம் சின்னத் தோட்டம் பகுதியில் கிண்ணியா நகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகளை சின்னத் தோட்ட பகுதியில் கொட்டுவதனால் கழிவுகளை உண்ண வருகின்ற யானை அருகில் குடியிருப் பவர்களின் குடியிருப்புகளுக்கு வந்து தம்மையும் தமது தோட்ட பயிர்களையும் அழித்து விடும் என அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த யானை பாதுகாப்பு மின்சார வேலி கடந்த சில வருடங்களாக இயங்காததனால் குப்பை மேட்டுக்கு வருகின்ற யானை வீடுகளுக்கும் வந்துவிடும் அபாயம்உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏற்கனவே இதே போன்று நுழைந்த யானை வீடுகளையும் விட்டுத் தோட்ட பயிர்களையும் அழித் துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

தாம் பயிரிட்டுள்ள தென்னை, வாழை, மரவள்ளி முதலான பயிர்களை அழித்து விடும் எனவும், மின்சார வேலியை அமைத்துத் தருமாறும் கூறும் அம்மக்கள், தமக்கு பாதுகாப்புத் தர வேண்டும் எனவும் கோருகின்றனர்.






## கல்முனை மாநகர சபையில் 3 மணியுடன் நிறைவடையும் நிதிக் கொடுக்கல் வாங்கல்

(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை மாநகர சபையின் முகப்பு அலுவலகத்தில் இடம்பெறும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பிற்பகல் 3 மணியுடன் நிறைவடையும் என மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கான சேவைகளை ஒரே கூரையின் கீழ் இலகுவாக வழங்கும் பொருட்டு மாநகர சபையின் முகப்பு அலுவலகத்தில் டிஜிட்டல் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள Onestop Service புது வருடத்துடன் உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, இயங்கி வருகின்றது.

இங்கு பொது மக்களும் வர்த்தகர்களும்உரியஆவணங்களுடன்சோலை வரி மற்றும் சேவைக் கட்டணங்களை செலுத்திவிட்டு, இங்கிருந்தவாறே தமக்கான சேவைகளை இலகுவாக நிறைவு செய்து கொண்டு செல்ல முடியும்.

இதன் மூலம் கடந்த காலங்களில் சேவைகளை பெற்றுக் கொள்வதில் நிலவி வந்த கால தாமதங்கள் மற்றும் தேவையற்ற அசௌகரியங்கள் முற்றாக தவிர்க்கப்படுவதுடன் தம்மால் செலுத்தப்படுகின்ற வரிகள் மற்றும் கட்டணத் தொகைகளுக்கு முழுமையான உத்தரவாதமளிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் மாநகர சபையின் வருமானப் பிரிவில் இடம்பெற்ற நிதி மோசடியை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு அரச அங்கீகாரம் பெற்ற வயம்ப அதிகார சபையினால் வடிவமைக்கப்பட்ட செயலி ஊடாகவே சோலை வரி உட்பட அனைத்து அறவீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அலுவலக நாட்களில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சோலைவரி உட்பட அனைத்து சேவைக் கட்டணங்களையும் இங்கு செலுத்த முடியும். இச்செயற்பாடு தினமும் பிற்பகல் 3 மணியுடன் முடிவுறுத்தப்பட்டு, அறவிடப்பட்ட பணம் வங்கியில் வைப்பிலிடப்படுவதால், அதன் பின்னர் எக்காரணம் கொண்டும் அறவீடுகளை மேற்கொள்ள முடியாது என்பதை பொது மக்களும் வர்த்தகர்களும் கவனத்திற் கொண்டு, ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம், என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## கல்முனை மாநகர் சந்தான ஈஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிசேகம்!




(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை மாநகர் சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிசேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று கிரியைகள் ஆரம்பமாகி வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம் பெறும்.

அதனையடுத்து 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மஹா கும்பாபிசேகம் இடம் பெறுமென ஆலய பரிபாலன சபைத்தலைவர் வே. செவ்வேள் தெரிவித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2024 இல் வெளியிடப்பெற்றது.